# பவானி நகராட்சி 30.08.2024-ம் தேதி வெள்ளிக்கிழமை நடைபெற்ற அவசரக் கூட்ட நடவடிக்கைகள் தீர்மானத்தின் உண்மை நகல்

**பொருள்எண்**: 1

பவானி நகராட்சிக்கு சொந்தமான 9 ஆண்டு மற்றும் 3 ஆண்டு குத்தகை இனங்கள் மற்றும் கடை உரிமங்களுக்கு 28.08.2024 ஆம் தேதியன்று நடைபெற்ற பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | குத்தகை இனம் | பொது ஏலத்தில் கலந்துக்கொள்ளப்பட்ட நபர்களின் விபரம் | ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்ட விபரம் |
|---|---|---|---|
| 1 | ஆணையாளர் குடியிருப்பு நீர் தேக்கத் தொட்டி வளாக கடை எண்.3 | திருமதி.ச.சேனா சுல்தானா பேகம் க/பெ காதர் ஒலி,<br>60/60 வசந்தம் நகர், பவானி.<br>ஏலக் கேள்வி தொகை <u>ரூ.10,000/-</u> | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.9,750/- |
| 2 | | திரு.பாபு த/பெ பழனிசாமி,<br>6B, காவேரி நகர்,<br>குமாரபாளையம்.<br>ஏலக் கேள்வி தொகை ரூ.9,700./- | ஒப்பந்தப்புள்ளி பெறப்படவில்லை. |
| 3 | | திரு.ராதா த/பெ வீரன்,<br>14/368, எஸ்.எம்.எஸ் நகர்,<br>ராணா நகர் மேற்கு, பவானி.<br>ஏலக் கேள்வி தொகை ரூ.9,800/- | ஒப்பந்தப்புள்ளி பெறப்படவில்லை. |

மேற்படி வரப்பெற்ற உயர்ந்தபட்ச ஏலத் தொகையினை இறுதி செய்திட மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.1450/2020/அ2)**

**அலுவலக குறிப்பு:**

ஆணையாளர் குடியிருப்பு நீர் தேக்கத் தொட்டி வளாக கடை எண்.3 –க்கு உயர்ந்தபட்ச ஏலக்கேள்வித் தொகை கோரிய திருமதி.ச.சேனா சுல்தானா பேகம் க/பெ காதர் ஒலி என்பவர் ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.9,750./- மற்றும் ஏலக்கேள்வித் தொகை ரூ.10,000./- கோரியுள்ளார். இரண்டில் அதிகபட்சமான ஏலக்கேள்வித் தொகை ரூ.10,000./- அரசாங்க மதிப்பு <u>ரூ.9,020./-</u>ஐ விட கூடுதலாக ரூ.980./- கோரியுள்ளார். எனவே திருமதி. ச.சேனா சுல்தானா பேகம் என்பவரது ஏலக்கேள்வி தொகை <u>ரூ.10,000./-</u> யை அங்கீகரித்து மன்றம் உறுதி செய்யலாம்.

**மன்ற தீர்மான எண்.** 127

உயர்ந்தபட்ச ஏலத்தொகை ஏற்கப்பட்டது.

பொருள்எண்: 2

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.4) துறை அரசாணை (டி) எண்.66, நாள்.06.08.2024 –இல் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு சொந்தமான கடைகள் மற்றும் வணிக வளாகங்களில் நிலவும் வாடகை உள்ளிட்ட பல்வேறு பிரச்சனைகளை தீர்ப்பதற்கு வழிகாட்டுதல் குழு மற்றும் துணைக்குழுக்கள் அமைக்கப்பட்டது மற்றும் வழிகாட்டு நெறிமுறைகள் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

மேற்கண்ட அரசாணை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது. (ந.க.எண்.1450/2020/அ2)

<u>அலுவலக குறிப்பு:</u>

மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**மன்ற தீர்மான எண். 128**

மன்றம் பார்வையிடப்பட்டு பதிவு செய்யப்பட்டது.

(ஓம்)இ.சிந்தூரி
தலைவர்
பவானி நகராட்சி.

/ உண்மை நகல் /

ஆணையாளர்,
பவானி நகராட்சி.

அ/ப

3/3 2/9/24.

2/9/24